# 11 - ம் வகுப்பு தாவரவியல் மற்றும் உயிரி - தாவரவியல்

## தேர்வு எழுதும் மாணவர்களுக்கு பயன்படும் முக்கிய பாடக் குறிப்புகள்

## பாடம் - 1

**1.வைரஸ்கள்** - மிக நுண்ணிய உயிரி, நச்சு என்பது பொருள், உயிரியலின் புதிர் (உயிருள்ள மற்றும் உயிரற்ற பண்பு கொண்டவை) ஆகும்

**2. வைரஸ்களின் மரபணு தொகையம்** - வைரஸ்கள் DNA மற்றும் RNA என்ற இரண்டு வகை உட்கரு அமிலங்களைக் கொண்டுள்ளது.

**3. பாக்டீரிய.ஃ.பேஜ்** - பாக்டீரியங்களை தாக்கி அழிக்கும் வைரஸ்கள்

**4. விரியான்** - தொற்று தன்மை வாய்நத செல்லுக்கு வெளியே வாழும் முழுமையான வைரஸ்

**5. விராய்டுகள்** - புரத உறையற்ற வட்ட வடிவ ஓரிழை RNA

**6. விருசாய்டுகள்** - சிறிய வட்ட வடிவ RNA மற்றும் பெரிய RNA மூலக்கூறுவுடன் தொடர்பு கொண்டது

**7. பிரியான்கள்** - தொற்றுத் தன்மை வாயந்த வைரஸின் புரதத்துகள்கள் ஆகும்.

**8. இரண்டு உலக வகைப்பாடு** - லின்னேயஸ வகைப்பாடு பிரிவுகள் 1. பிளாண்டே 2. அனிமாலியா

**9. ஐந்து உலக வகைப்பாடு** - விட்டாக்கெர் வகைப்பாடு - பிரிவுகள் 1. மொனிரா 2. புரோடிஸ்டா 3. பூஞ்சைகள் 4. பிளாண்டே 5. அனிமாலியா

**10. பாக்டீரியங்கள்** - ஒரு செல் தொல்லுட்கரு உயிரி. பாக்டீரிய இயல் என்ற நூல் மூலம் அறியலாம்.

**11. பிளாஸ்மிட்** - பாக்டீரியாவில் உள்ள சிறிய வட்டவடிவ தானே பெருக்கமடையும் கூடுதல் குரோமோசோம்

**12. கேப்னோபிலிக் பாக்டீரியங்கள்** - Co2 பயன்படுத்தி வளரும் பாக்டீரியங்கள்

**13. அகவித்து** - பாக்டீரியங்கள் சாதகமற்ற சூழ்நிலைகளில் தன்னை காத்துக் கொள்ள தோற்றுவிப்பது.

**14. ஆர்க்கி பாக்டீரியங்கள்** - மிக கடுமையான சூழ்நிலைகளில் அதாவது அதிக வெப்பம் மற்றும் அதிக உப்பு உள்ள இடங்களில் வாழும் பாக்டீரியங்கள்

**15. சயனோ பாக்டீரியங்கள்** - நீலப்பசும் பாசிகள் எனப்படும் ஒளிச்சேர்க்கையில் ஈடுபடும் தொல்லுட்கரு உயிரி ஆகும்.

**16. மைக்கோபிளாஸ்மா** - பொரித்த முட்டை எனப்படும் பல உருவம் உடைய, கிராம் எதிர் உயிரி, மொல்லிகியுட்கள் எனப்படுகிறது. சந்தனத்தில் கூர்நுனி நோய் உருவாக்குகிறது.

**17. ஆக்டினோமைசீட்ஸ்** - ஆக்டினோபாக்டீரியங்கள் அல்லது கதிர் பூஞ்சை எனப்படுகிறது. எ.கா. ஸ்ட்ரெப்டோமைசிஸ். லெகூம் அல்லாத தாவரமான அல்னஸ் தாவரத்தில் நைட்ரஜன் நிலைப்படுத்துகிறது.

**18. பூஞ்சைகள்** - பூஞ்சை என்பது காளான்கள் எனப்படும். மெய்யுடகரு உடைய பச்சையம் அற்ற உயிரி ஆகும்.

**19. முழுமை பெறாத பூஞ்சைகள்** - டியூட்டிரோமைசீட்ஸ் இதில் பால் இனப்பெருக்கம் காணப்படுவதில்லை.

**20. பூஞ்சை வேரிகள்** (மைக்கோரைசா வேரிகள் ) - உயர் தாவர வேர்களுடன் ஒருங்குயிரியாக வாழும் பூஞ்சைகளின் மைசீலயம்.

**21. லைக்கன்கள்** - பாசிகள் மற்றும் பூஞ்சைகளுக்கு இடையே ஆன ஒருங்குயிரி அமைப்பு உடைய உயிரினங்கள் ஆகும்.

## பாடம் - 2

**22. சந்ததி மாற்றம்** - வாழ்க்கை சுழற்சியில் ஒற்றை மடிய கேமிட்டக நிலை மற்றும் இரட்டை மடிய வித்தகநிலை மாறி மாறி வருவது.

**23. பாசிகள்** - பல்வேறு வாழிடங்களில் வாழும் தற்சார்ப உயிரிகள். அளவு , வடிவம் மற்றும் அமைப்பில் வேறுபடுகிறது.

**24. பாசியின் வகைகள் - குளோரோபைசி**- பசும்பாசிகள் , **ரோடோபைசி** - சிவப்பு பாசிகள் , **பியோபைசி** - பழுப்பு பாசிகள்

**25. பிரையோபைட்டுகள்** - ஈரமான நிழல் பகுதியல் வாழும் எளிய நில வாழ்த்தாவரங்கள் ஆகும்.

**BY - G. SENTHILKUMAR - P.G TEACHER (BOTANY) KNHSS-KAMUTHI - RAMNAD DT.**

**26. பிரையோபைட்டுகளின் வகைப்பாடு** - 1.ஹெப்பாடிக்காப்சிடா - ரிக்ஸியா, 2. ஆந்தோசெரட்டாப்சிடா- ஆந்தோசிராஸ் , 3. பிரையாப்சிடா - பாலிடிரைக்கம்.

**27. டெரிடோபைட்டுகள்** - விதைகள் அற்ற வாஸ்குலர் திசுக்களை உடைய நிலத்தில் வாழும் தாவரங்கள்.

**28. ஸ்டீல்** - வாஸ்குலார் திசுவின் மைய உருளையை குறிக்கும் சொல். இதில் சைலம், புளோயம் உள்ளது.

**29. யூஸ்டீல்** - வாஸ்குலார் கற்றை பித்தை சூழ்ந்து வளையமாக உள்ளது. இருவித்திலைத் தாவர தண்டில் உள்ளது.

**30. ஜிம்னோஸ்பெர்ம்கள்** - பசுமை மாறாத திறந்த விதைகளை உடைய பூவாத்தாவரங்கள் (சைகஸ்)

**31. ஆஞ்சியோஸ்பெர்ம்கள்** - உலகில் பெரும்பான்மையாக உள்ள மலர்களை உருவாக்கும் மூடுவிதைத் தாவரங்கள் ஆகும்.

## பாடம் - 3

**32. வளரியல்பு** - தாவரத்தின் பொது வடிவம் வளரியல்பு ஆகும். ( மரம் , செடி, கொடி )

**33. வாழிடம்** - தாவரங்கள் வளரும் இடம் 1 தரை வாழிடம் 2 நீர் வாழிடம்.

**34. வாழ்காலம்** - தாவரங்கள் வாழும்காலம் 1 ஒரு பருவத்தாவரம் - நெல் 2. இருபருவத் தாவரம் - கேரட் 3. பல பருவத்தாவரம் - மாமரம்

**35. பல்காய்ப்பு தாவரங்கள்** - ஒவ்வொரு வருடமும் பூத்து காய்க்கும் தாவரங்கள் - மா

**36. ஒரு காய்ப்பு தாவரங்கள்** - பல்லாண்டு வாழ்ந்து ஒரு முறை மட்டும் பூத்து காய்க்கும் - வாழை

**37. வேரின் பண்புகள்** - நேர் புவி நாட்டம் உடையவை எதிர் ஒளி நாட்டம் உடையவை, பச்சையம் மற்றும் கணு, கணுவிடைப்பகுதி இல்லை.

**38. வேரின் பாகங்கள்** - வேர் மூடி, வளராக்குத் திசு மண்டலம், செல் நீட்சி மண்டலம், முதிர்ச்சி மண்டலம்.

**39. ஆணி வேர்** - விதையின் முளை வேரில் இருந்து உருவாகும் வேர்

**40. வேற்றிட வேர்** - விதையின் முளை வேரில் இல்லாமல் தாவரத்தின் பிற பாகங்களில் உருவாகும் வேர்

**41. சுவாச வேர்கள்** - சதுப்பு நிலங்களில் வாரும் தாவரங்களில் உருவாகும் எதிர் புவிசார்பு சுவாசிக்கும் வேர் - அவிசீனியா.

**42. தொற்று வேர்கள்** - தொற்றுத் தாவரம் ஆர்க்கிடுகளில் உள்ள காற்றில் இருந்து நீர் உறிஞ்சும் வெலாமன் திசு உடைய வேர்கள் - வாண்டா

**43. ஒட்டுண்ணி வேர்கள்** - பிற தாவரங்களில் ஒட்டி அத்தாவரங்களில் உணவை உறிஞ்சும் வேர்கள் - கஸ்கியூட்டா

**44. ஒளிச்சேர்கதை வேர்கள்** - ஏறு அல்லது தொற்றுத் தாவர வேர்கள் பசுங்கணிகம் கொண்டு ஒளிச்சேர்க்கையில் ஈடுபடுவது. டைனோஸ்போரா

**45. தண்டின் பண்புகள்** - நேர் ஒளிநாட்டம் மற்றும் எதிர் புவிநாட்டம் உடையவை , கணு மற்றும் கணுவிடைப்பகுதி உடையவை

**46. இலைத் தொழில் தண்டு** - பசுமையான தட்டையான கணு மற்றும் கணுவிடைப்பகுதி உடைய ஒளிச்சேர்க்கையில் ஈடுபடும் தண்டு - ஒபன்சியா

**47. குறு இலைத் தொழில் தண்டு** - தட்டையான அல்லது உருளையான ஒன்று அல்லது இரண்டு கணுவிடைப்பகுதியை மட்டும் கொண்ட ஒளிச்சேர்க்கையில் ஈடுபடும் தண்டு. அஸ்பராகஸ்

**48. தரைகிழ் தண்டின் உருமாற்றம்** - 1. குமிழம் - வெங்காயம் 2. கந்தம் - கால்சிகம் 3. மட்டநிலத் தண்டு - இஞ்ஜி 4. கிழங்கு - உருளைக் கிழங்கு

**49. இலையின் பண்புகள்** - தண்டின் கணுவில் தோன்றும் பக்கவாட்டு வளரிகள் ஆகும் , நுனி மொட்டு அற்றவை

**50. இலையின் பணிகள்** - ஒளிச்சேர்க்கை , நீராவிப்போக்கு மற்றும் வாயு பரிமாற்றம்.

**51. இலையின் பாகங்கள்** - இலையடிப்பகுதி , இலைக்காம்பு , இலைப்பரப்பு

**52. வட்ட இலை அடுக்கமைவு** - ஒவ்வொரு கணுவிலும் மூன்றிற்கு மேற்பட்ட இலைகள் காணப்படுவது. அலமாண்டா

**53. இலை வகைகள்** -1. தனி இலை - ஒரு இலைக்காம்பில் ஒரு இலைத்தாள் உடையவை (மா) 2.கூட்டிலை - ஒரு இலைக்காம்பில் பல இலைத்தாள்கள் உடையவை (புளி)

**BY - G. SENTHILKUMAR - P.G TEACHER (BOTANY) KNHSS-KAMUTHI - RAMNAD DT.**

**54. இலைத் தொழில் காம்பு** - பசுமையான, தட்டையான இலைபோன்ற இலைக்காம்புடையவை - அகேஷியா.

**55. குடுவைத் தாவரம்** - நெப்பந்தஸ் தாவரத்தில் இலை குடுவை வடிவில் மாற்றம் அடைந்துள்ளது. பூச்சி உண்ணும் தாவரம் ஆகும்.

## பாடம் - 4

**56. மஞ்சரி** - தாவரத்தின் கிளைத்த அல்லது கிளைக்காத அச்சின் மீது மலர்கள் குறிப்பிட்ட முறையில் தோன்றுவது. ஆகும்.

**57. மஞ்சரியின் வகைகள்** - 1. ரசிமோஸ் - வரம்பற்ற வளர்ச்சி உடையவை 2. சைமோஸ் - வரம்படைய வளர்ச்சி உடையவை 3. கலப்பு வகை - வரம்புடைய மற்றும் வரம்பற்ற மலர்கள் கலந்து தோன்றுவது. 4. சிறப்பு வகை - எந்த வகையில் அடங்காதவை

**58. திர்சஸ்** - ரசீம் அச்சில் அமைந்த சைம்கள் - ஆசிமம் (துளசி)

**59. வெர்ட்சிலாஸ்டர்** - மைய அச்சில் இரு புறமும் எதிர் எதிர் பக்கவாட்டு காம்பற்ற மலர்களைக் கொண்டது (தும்பை)

**60. சையாத்தியம்** - முழு மஞ்சரியும் தனி மலர் போல உள்ளது. தேன் சுரப்பி மற்றும் வட்ட பூவடிச் செதில் உடையவை.(யூபோர்பியா)

**61. ஹைபந்தோடியம்** - உள்ளீடற்ற பூத்தளத்தில் காம்பற்ற ஒருபால் மலர்கள் உள்ளவை ( ஆலமரம்)

**62.அ. மலரின் பாகங்கள்** - புல்லி வட்டம், அல்லி வட்டம், மகரந்ததாள் வட்டம், சூலக வட்டம்.

**63. இருபால் மலர் தாவரங்கள்** - மகரந்தாள் வட்டம் மற்றும் சூலக வட்டம் இரண்டும் கொண்ட மலர்கள் (செம்பருத்தி)

**64. ஒரு பால் மலர் தாவரங்கள்** - ஆண் மலர் மற்றும் பெண்மலர் தாவரங்கள் தனித்தனியாக காணப்படுவது (பனை)

**65. பன்பால் மலர்த் தாவரங்கள்** - ஆண் மலர், பெண் மலர் மற்றும் இருபால் மலர் அனைத்தும் காணப்படும் தாவரம் ( வாழை )

**66. இதழமைவு** - மலரின் மொட்டு பருவத்தில் அல்லி மற்றும் புல்லி இதழ்கள் அமைந்திருக்கும் முறைஇ

**67. ஒரு கற்றை மகரந்ததாள்** - மகரந்த தாள்கள் அனைத்தும் ஒரு கற்றையாக இணைந்தது - செம்பருத்தி

**68. இரு கற்றை மகரந்ததாள்** - மகரந்ததாள்களின் மகரந்த கம்பிகள் இரண்டு கற்றைகளாக இருப்பது பேபேசி - பட்டாணி

**69. பல கற்றை மகரந்ததாள்** - மகரந்தங்கள் பல கற்றைகளாக காணப்படுவது - சிட்ரஸ்

**70. பை இணைவு** - மகரந்த கம்பிக்ள இணையாமல் மகரந்த பைகள் இணைந்தது - ஆஸ்ட்ரேசி

**71. முழு இணைவு** - மகரந்தகம்பி மற்றும் மகரந்த பைகள் முழுவதும் இணைந்தது - காக்சீனியா

**72. சூலகப்பை அமைவிடம்** - 1. மேல்மட்ட சூலகப்பை - பேபேசி 2. கிழ் மட்ட சூலகப்பை - மியூசேசி

**73. சூல் ஒட்டு முறை** - 1. விளிம்பு சூல் ஒட்டு முறை - பேபேசி 2. அச்சு சூல் ஒட்டு முறை - தக்காளி 3. சுவர் சூல் ஒட்டுமுறை - வெள்ளரி 4. தடுப்பு சுவர் சூல் ஒட்டுமுறை - நிம்∴பயேசி 5. அடி சூல்ஒட்டு முறை - சூரியகாந்தி.

## பாடம் - 5

**74. வகைப்பாட்டியல்** - உயிரினங்களை இனங்கண்டறில் மற்றும் பெயரிடுதல் குறித்த பிரிவு ஆகும்.

**75. குழும பரிணாம வகைப்பாட்டியல்** - வகைப்படுத்தல் மற்றும் இனப்பரினாமம் அறிதல் ஆகிய இரண்டும் அடங்கிய பிரிவு

**76. சிற்றினம்** - வகைப்பாட்டின் அடிப்படை அலகு. அதிக உருவ ஒற்றுமைகளை கொண்ட உயிரினங்களின் தொகுப்பு

**77. இரு சொற் பெயரிடல் முறை** - காஸ்பர்டு பாஹின் உருவாக்கினார். ஒவ்வொரு தாவரத்திற்கும் இரண்டு சொற்களால் ஆன பெயரிடுதல். ( ஒரைசா சடைவா)

**78. ஆசிரியர் பெயர் சுட்டம்** - ஒரு தாவரத்ததை முதன்முதலில் முறையாக பெயரிட்டு விவரித்தவர் பெயரை சுருக்கமாக குறிப்பது. மாஞ்சிபெரா இண்டிகா **லின். லின் என்பது லின்னேயஸ்**

**79. வகைப்பாட்டின் வகைகள்** - 1. செய்கை முறை வகைப்பாடு - லின்னேயஸ் வகைப்பாடு 2. இயற்கை முறை வகைப்பாடு - பெந்தம் மற்றும் ஹீக்கர் வகைப்பாடு 3. இனப்பரினாம வழி வகைப்பாடு - எங்ளர் மற்றும் பிராண்டல் வகைப்பாடு

**BY - G. SENTHILKUMAR - P.G TEACHER (BOTANY) KNHSS-KAMUTHI - RAMNAD DT.**

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

**80. வேதி முறை வகைப்பாடு** - தாவரங்களில் இருந்து பெறப்பட்ட வேதிப் பொருட்களின் அடிப்படையில் அமைந்த வகைப்பாடு.

**81. உயிரிய முறைமை** - பரிசோதனை , சுற்றுச் சூழல், செல்லியல் அடிப்படையில் அமைந்த வகைப்பாடு.

**82. கேரியோடாக்ஸானமி** - மரபணுக்கள் மற்றும் குரோமோசோம்கள் அடிப்படையில் அமைந்த வகைப்பாடு.

**83. குருதிநீர் அல்லது ஊநீர் வகைப்பாடு** - உயிரிகளில் தோன்றும் நோய்த் தடுப்பாற்றல் வேதிப்பொருட்களின் அடிப்படையில் அமைந்த வகைப்பாடு.

**84. வண்ணத்துப்பூச்சி வடிவ அல்லி வட்டம்** - பேபேசி குடும்பத் தாவர மலர்களில் காணப்படுகிறது. கொடியல்லி , சிறகல்லி படகல்லி ஆகியவை வண்ணத்து பூச்சி வடிவில் இறங்கு தழுவு இதழமைவில் உள்ளது.

**85. புவி புதை கனி** - நிலக்கடலையில் கனி கருவுறுதலுக்கு பின் புமியில் புதைந்து வளர்சசியடைவதால்.

**86. மகரந்த திரள்** - காலோடிராபிஸ் (எருக்கு) தாவரத்தில் மகரந்ததுகள்கள் ஒன்றோடு ஒன்று மெழுகு போன்ற பொருளால் இணைந்து உருவாகும் அமைப்பு.

**87. கனி மூடிய புல்லி வட்டம்** - பைசாலிஸ் தாவரத்தில் புல்லிவட்டம கனியை மூடி காணப்படுகிறது.

**88. ரைபிடியம்** - கோணம் விலகிய ஸ்கார்பியாய்டு சைமோஸ் மஞ்சரி ரைபிடியம் - (சொலானேசி)

**89. விதை முண்டு** - ஆமணக்கு விதைகளில் குமிழ் போன்ற வெண்மையான நீர் உறிஞ்சம் அமைப்பு காணப்படுவது ஆகும்.

**90. கூட்டு மடல் கதிர் மஞ்சரி** - வாழை (மியூசா) தாவரத்தில் காணப்படும் மஞ்சரி கூட்டு மடல் கதிர் மஞ்சரி ஆகும்.

**91. ஸ்கேபிஜிரஸ் மஞ்சரி** - மஞ்சரி காம்பு தரையில் இருந்து உருவாகி இறுதியில்இ மலர்கள் கொத்தாக காணப்படுவது ( லில்லியேசி )

## பாடம் - 6

**92. நுண்ணோக்கியியல்** - செல் அமைப்பை அறிய பயன்படும் நுண்ணோக்கிகள் குறித்து அறிய உதவுவது.

**93. வேறுபடுத்தும் திறன்** - இரண்டு அருகருகே உள்ள பொருளைப் தெளிவாக காட்டும் லென்ஸின் திறன்

**94. ஒளிப் புல நுண்ணோக்கி** - ஒளிக்கதிர் உதவியுடன் செல்களைப் வேறுபடுத்தி அறிய உதவும் நுண்ணோக்கி.

**95. மின்னணு நுண்ணோக்கி** - எலக்ட்ரான் கற்றைகளைப் பயன்படுத்தி காண உதவும் நுண்ணோக்கி. இரண்டு வகை உள்ளது 1. ஊடுருவும் மின்னணு நுண்ணோக்கி 2. பரவல் மின்னணு நுண்ணோக்கி

**96. செல் கொள்கை மற்றும செல் விதி** - 1. அனைத்து உயிரிகளும் செல்களால் ஆனது. 2. ஏற்கனவே உள்ள செல்லில் இருந்து புதிய செல் உருவாகிறது.

**97. செல் கொள்கை - விதி விலக்கு** - லைரஸ்கள் , பிரியான்கள்

**98. புரோட்டோபிளாசம் பண்புகள்** - 1. செல்லில் உள்ள ஒளி ஊடுருவும் பலநிலைத் திரவம். 2. பிரௌனியன் அசைவு, அமீபாய்டு இயக்கம் உடையது.

**99. செல்லின் வகைகள்** - 1 புரோகேரியோட்டுகள் (பாக்டீரியா)2. மீசோகேரியோட்டுகள் (நாக்டியூலியா) 3. யூக்கோரியோட்டுகள் (பூஞ்சைகள், தாவரங்கள்)

**100. செல் சுவரின் பாகங்கள்** - 1 முதலாம் செல்சுவர் 2. இரண்டாம் செல்சுவர் 3. மையத்தட்டு

**101. பிளாஸ்மோடெஸ்மேட்டா** - செல் சுவரில் காணப்படும குறுகிய துளைகள். இதன் வழியாக பொருட்கள் கடத்தப்படுகிறது.

**102. செல் சுவரின் பணிகள்** - 1. செல்லுக்கு வடிவம் கொடுக்கிறது. 2. செலின் புரோட்டோபிளாசத்தை பாதுகாக்கிறது.

**103. செல் சவ்வின் பணிகள்** - 1. நீர் மற்றும் ஊட்டப் பொருள் கடத்தல் 2. தேவையற்ற பொருட்கள் செல்லுக்குள் செல்லாமல் தடுத்தல்.

**104. செல் உள்விழுங்குதல்** - இரு வகைப்படும் 1. ∴பேகோசைட்டோசிஸ் - செல்லினுள் திடப் பொருள் உள்ளெடுத்தல் 2.பின்னோசைட்டோசிஸ் - செல்லினுள் திரவப்பொருள் உள்ளெடுத்தல்

**105. உட்கருவின் பணிகள்** - 1. செல்லின் செயல்களைக் கட்டுப்படுத்துகிறது. 2. மரபு செய்திகளை சேமிக்கிறது.

**106. குரோமோசோம் வகைகள்** - குரோமோசோமில் சென்டிரோமியர் அமைப்பின் அடிப்படையில் 1. மெட்டா சென்டிரிக் 2. சப் மெட்டா சென்டிரிக் 3. அக்ரோ சென்டடிரிக் 4. டீலோ சென்டிரிக்

**107. சிறப்பு வகை குரோமோசோம்கள்** - 1 . பாலிடீன் குரோமோசோம் - பால்பியானி - டுரோசோபில்லாவில் கண்டறிந்தது 2.விளக்கு தூரிகை குரோமோசோம் - பிளமிங் - சாலமண்டார் விலங்கின் ஊசைட்டுகளில் கண்டறிந்தார்.

## பாடம் - 7

108. செல் சுழற்சி - செல்கள் புதிய செல் உருவாக்கும் தொடர் நிகழ்வு ஆகும்.

109. செல் சுழற்சி நிலைகள் - 1. இடைக்கால நிலை ( G1 நிலை - 11 மணி நேரம் , S நிலை - 8 மணி நேரம் , G2 நிலை - 4 மணி நேரம் ) 2. மைட்டாடிக் நிலை - 1 மணி நேரம்

110. மைட்டாடிக் நிலைகள் - 1. புரோ.ஃபேஸ் நிலை 2. மெட்டா.ஃபேஸ் நிலை 3. அனா.ஃபேஸ் நிலை 4.டீலோ.ஃபேஸ் நிலை என்பன

**111. வரையறு புள்ளி** - G1 நிலையில் செல் பகுப்படைவதைத் தடை செய்யுது செல்பகுப்படையாத $G_0$ நிலைக்கு மற்றும் புள்ளி வரையறுப் புள்ளி ஆகும்.

**112. செல் பகுப்பின் வகைகள்** - 1 ஏமைட்டாசிஸ் - பாக்டீரியா செல்லில் நடைபெறுவது 2. மைட்டாசிஸ் - தாவர, விரங்குளின் உடல்செல்களில் நடைபெறுகிறது. 3. மியாசிஸ் - தாவர, விரங்குளின் இனச் செல்களில் நடைபெறுகிறது

**113. காரியோகைனெசிஸ்** - செல் பகுப்பில் உட்கரு பகுப்படைவதைக் குறிக்கிறது.

**114. சைட்டோகைனசிஸ்** - செல் பகுப்பில் சைட்டோபிளாசம் பகுப்படைவதைக் குறிக்கிறது.

**115. மைட்டாசிஸ் வகைகள்** - 1 திறந்த மைட்டாசிஸ் ( உட்கரு உறை சிதைந்து பகுப்படைவது) 2.மூடிய மைட்டாசிஸ் ( உட்கரு உறை சிதையாமல் பகுப்படைவது )

**116. மைட்டாசிஸ் சிறப்பியல்புகள்** - வளர்ச்சி , பாலிலா இனப்பெருக்கம் , இழப்பு மீட்டல் ஆகியவற்றில் பங்கு கொள்கிறது.

**117. மியாசிஸ் செல்பகுப்பு** - உயர் தாவரங்களின் இனச்செல் உருவாக்கும் திசுக்களில் நடைபெறும் செல்பகுப்பு - குரோமோசோம் எண்ணிக்கை பாதியாக குறைக்கப்படுகிறது.

**118. குறுக்கெதிர் மாற்றம்** - மியாசிஸ் செல்பகுப்பில் பாக்கிடீன் நிலையில் சகோதரி அல்லாத குரோமோடிட்கள் கயாஸ்மா என்ற புள்ளியில் பரிமாற்றம் அடைவது

**119. மியாசிஸ் முக்கியத்துவங்கள்** - 1. உயிரினங்களில் நிலையான எண்ணிக்கையில் குரோமோசோம் இருப்பதை உறுதி செய்கிறது. 2. பரினாமம் நிகழ காரணமாகிறது.

## பாடம் - 8

**120. கார்போஹைட்ரேட்டுகளின் வகைகள்** - 1. ஒற்றை சர்க்கரை - பிரக்டோஸ், குளுக்கோஸ் 2.இரட்டை சர்க்கரைகள் - மால்டோஸ் 3. பாலி சாக்கரைடுகள் - தரசம், செல்லுலோஸ்

**121. தரசம்** - தாவரங்களில் சேமிக்கும் பாலி சாக்கரைடு. அமைலேஸ் மற்றும் அமைலோ பெக்டின் என்ற பொருட்களால் ஆனது.

**122. கிளைக்கோஜன்** - விலங்கு தரசம் ஆகும். விலங்குகளில் கல்லீரலில் சேமிக்கபடுகிறது.

**123. கைட்டின்** - பாலி சாக்கரைடுகள் மற்றும் அமினோ அமிலங்களின் கூட்டுபொருள் ஆகும் . பூஞ்சையின் செல் சுவரில் உள்ளது.

**124. ஸ்விட்டர் அயனி** - அமினோ அமிலங்கள் ஸ்விட்டர் அயனியாக உள்ளது . இவை நேர் மின் மற்றும் எதிர் மின்சுமை இரண்டும் கொண்டது.

**125. புரதத்தின் இயல்பு திரிபு** - வெப்பத்தினால் புரதம் தனது முப்பரிமான அமைப்பை இழப்பது.

**126. நொதிகள்** - உயிரினங்களில் வளர்சிதை மாற்றங்களை ஊக்குவிக்கும் கோள வடிவப் புரதங்கள் ஆகும்.

**127. நொதிகளின் பண்புகள்** - 1. கோள வடிவ புரத வினையூக்கி 2. அதிக குறிப்பு சார்புதன்மை உடையது மற்றும் முடிவில் மாறாதது.

**128. ஊக்குவிப்பு ஆற்றல்** - நொதியின் உதவியால் வினையின் வேகத்தை மாற்றும் ஆற்றல் ஊக்குவிப்பு ஆற்றல் ஆகும்.

**129. நெதிகளின் செயலைப் பாதிக்கும் காரணிகள்** - 1. வெப்பநிலை 2. நொதியின் செறிவு 3. pH

**130. நொதியின் பயன்கள்** - 1. உயிரிய சலவைப் பொருளாக பயன்படுதல் 2. பிரக்டோஸ் அடர்சாறு தயாரிக்க பயன்படுகிறது.



Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

**131. நியூக்ளிக் அமிலங்கள்** - DNA மற்றும RNA ஆகியவை நியூக்களிக்அமிலங்கள் ஆகும். இவை உயிரினங்களின் மரபு பண்புக்கு காரணமாகிறது.

**132. நியூக்ளியோடைடு** - நைட்ரஜன் காரம், பெண்டோஸ் சர்க்கரை, பாஸ்பேட் கொண்டவை

**133. நியூக்ளியோசைடு** - நைட்ரஜன் காரம் மற்றும் பெண்டோஸ் சர்க்கரை மட்டும் கொண்டவை.

**134. DNA வின் சிறப்பு பண்புகள்** - 1 நீண்ட இரண்டு இழைகளால் ஆன மூலக்கூறு. 2. விட்டம் 20 $A^0$ மற்றும் ஒரு முழு சுற்று 34 $A^0$ உடையது. 3. பாஸ்போ டை எஸ்டர் பிணைப்புகள் கொண்டவை.

**135. RNA -வின் வகைகள்** - 1. தூது RNA 2. கடத்து RNA 3. ரைபோசோம் RNA இவை புரதச்சேர்க்கையில் ஈடுபடுகின்றன.

## பாடம் - 9

**136. ஆக்குத்திசுக்கள்** - தொடர்ந்து பகுப்படைந்து புதிய செல்களை உருவாக்கும் திசுக்களின் தொகுப்பு.

**137. ஆக்குத்திவின் பண்புகள்** - 1. ஒரே அளவு, மற்றும் வடிவம் கொண்டவை , அடர்ந்த சைட்டோபிளாசம் மற்றும் பெரிய உட்கரு கொண்டவை.

**138. ஆக்கு திசுவின் வகைப்பாடு** - இருப்பிடத்தின் அடிப்படையில் 1. நுனியாக்குத் திசு 2. இடையாக்குத் திசு 3. பக்க ஆக்குத்திசு.

**139. டூனிகா - கார்பஸ் கொள்கை** - ஷிமிட் உருவாக்கினர் . டூனிகா - புறத்தோலையும், கார்பஸ் - ஸ்டீல் மற்றும் புறணியை உருவாக்குகிறது.

**140. திசுத் தொகுப்பு வகைகள்** - 1. புறத்தோல் திசுத்தொகுப்பு 2. அடிப்படைத் திசுத்தொகுப்பு 3.வாஸ்குலார் திசுத் தொகுப்பு

**141. இலைத்துளைகள்** - இலையின் புறத்தோலில் காணப்படும் சிறிய துளைகள். இவை நீராவிப்போக்கு மற்றும் வாயுப் பரிமாற்றத்தில் ஈடுபடுகிறது.

**142. காப்பு செல்கள்** - இலைத்துளையை சூழ்ந்து காணப்படும் செல்கள். இருவித்திலைத்தாவரங்களில் அவரை விதை வடிவிலும், ஒருவித்திலைத் தாவரங்களில் சப்ளாக்கட்டை வடிவிலும் உள்ளது.

**143. துணை செல்கள்**- இலைதுளையை சூழ்ந்துள்ள காப்பு செல் அருகில் உள்ள பாரண்கைமா செல்கள் ஆகும்.

**144.டிரைக்கோம்கள்** - தண்டின் புறத்தோலில் காணப்படும் பல செல்களால் ஆன புற வளரிகள். கிளைத்து அல்லது கிளைக்காமல் காணப்படுவது.

**145. வேர் தூவி செல்கள்** (டிரைக்கோபிளாஸ்டுகள்) - வேரின் புறத்தோலில் காணப்படும் குட்டை செல்கள். இதில் இருந்து வேர்த்தூவிகள் உருவாகிறது.

**146. புறத்தோல் தொகுப்பின் பணிகள்** - 1. உட்புறத் திசுக்களை பாதுகாக்கிறது. 2. வாயுப்பரிமாற்றம் மற்றும் நீராவிப்போக்கில் உதவுகிறது. 3. கனி மற்றும் விதை பரவுதலில் உதவுகிறது.

**147. வாஸ்குலார் திசுத் தொகுப்பு** - சைலம் மற்றும் புளோயம் திசுக்களைக் கொண்டது. ஆஞ்ஜியோஸ்பெர்ம்கள் மற்றும் ஜிம்னோஸ்பெர்ம் தாவரங்களில் நன்கு வளர்ச்சியடைந்து காணப்படுகிறது.

## பாடம் - 10

**148. வாஸ்குல கேம்பியம்** - இது பக்க ஆக்குத்திசு . இரு வகைகள் உள்ளது 1 கற்றைக் கேம்பியம் 2.கற்றை இடைக்கேம்பியம்.

**149. இரண்டாம் நிலை சைலம்** - பொதுவாக கட்டை எனப்படும். 1. வன்கட்டை (துளைக்கட்டை) மோரஸ் 2.மென்கட்டை ( துளைகளற்ற கட்டை ) பைனஸ்

**150. ஆண்டு வளையங்கள்** - வசந்த கால முன்பருவக்கட்டை மற்றும் குளிர் கால பின்பருவக்கட்டை இணைந்து உருவாவது ஆகும். தாவரத்தின் வயதை கண்டறிய பயன்படுகிறது.

**151. மரக்கால நிலையியல்** - ஆண்டு வளையங்கள் அடிப்படையில் தாவரங்களின் வயதைக் கண்டறியும் முறை ஆகும்.

**152. பரவல் துளைக்கட்டை** - சைலக் குழாய்கள் பெரியதாக சீராக பரவியுள்ள கட்டை - ஏசர்

**153. வளையத் துளைக்கட்டை** - சைலக் குழாய்கள் சிறியதாக சீரற்று பரவியுள்ள கட்டை - குர்கஸ்

**154. டைலோஸ்கள்** - இரு வித்திலைத் தாவரங்களில் சைலக்குழாய்கள் அருகில் உள்ள பாரங்கைமா செல்களின் பலூன் போன்ற உள் வளரி நீட்சிகளால் அடைக்கப்படுவது.



Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

**155. வைரக்கட்டை (டியூராமென்)-** நீரைக்கடத்தாத உயிரற்ற கட்டை. முழுவதும் டைலோஸ்களால் அடைக்கப்பட்ட கடினமானது.

**156. சாற்றுக் கட்டை (அல்பர்னம்)** - நீரைக் கடத்தும். உயிருள்ள கட்டை. மென்மையானது.

**157. பெரிடெர்ம்** - பெல்லம், பெல்லோஜென் , பெல்லோடெர்ம் ஆகியவை இணைந்து உருவாவது. தாவரங்களின் பாதுகாப்பு அடுக்கு ஆகும்.

**158. பட்டைத் துளைகள்** - தண்டு மற்றும் வேர்களின் புறத்தோலில் காணப்படும் துளைகள் ஆகும். இது வாயு பரிமாற்றம் மற்றும் நீராவிப் போக்கு மேற்கொள்கிறது.

## பாடம் - 11

**159. உள்ளீர்த்தல்** - நீரில் கரையாத ஸ்டார்ச், புரதம் மற்றும் பிசின் போன்றவை நீரை ஈர்த்து பெருக்கமடைவது உள்ளீர்த்தல் ஆகும். இது விதை முளைக்க உதவுகிறது.

**160. நீரியல் திறன்** - கரைபொருள் உள்ளார்ந்த திறன் மற்றும் அழுத்தம் உள்ளார்ந்த திறன் இணைந்தது.

**161. சவ்வுடு பரவல்** - கரைப்பான் மூலக்கூறுகள் அதன் செறிவு அதிகமான இடத்தில் இருந்து செறிவு குறைவான பகுதிக்கு சவ்வின் மூலம் கடத்தப்படுவது ஆகும்.

**162. பிளாஸ்மா சிதைவு (உயிர்மச்சுருக்கம்)** - ஒரு செல் செறிவு மிக்க கரைசலில் வைக்கப்படும் போது செல்லில் உள்ள நீர் வெளியேறி புரோட்டோபிளாசம் சுருக்கமடைவது.

**163. பிளாஸ்மா சிதைவு மீட்சி** - உயிர்மச்சுருக்கம் அடைந்த செல் மீண்டும் செறிவு குறைவான கரைசலில் வைக்கப்படும் போது புரோட்டோபிளாசம் நீரைப் பெற்று இயல்பு நிலையை அடைவது.

**164.சாறேற்றம்** - வேரில் உறிஞ்சப்பட்ட நீர் சைலம் வழியாக மேல் நோக்கி கடத்தப்படுவது.

**165. நீராவிப் போக்கு** - தாவரங்களின் இலைத்துளை, பட்டைத்துளை வழியாக நீர் ஆவியாக வெளியேறுவது.

**166. நீர் வடிதல்** - காற்றில் ஈரப்பதம் அதிகமாக இருக்கும் போது இலை நுனியில் உள்ள ஹைடத்தோடு வழியாக நீர் வெளியேறுவது ஆகும்.

## பாடம் - 12

**167. கனிமங்களின் வகைப்பாடு** - தேவையின் அடிப்படையில் 1. பெருமூலகங்கள் - அதிகம் தேவைப்படுபவை பாஸ்பரஸ் , கால்சியம். 2. நுண் மூலகங்கள் - குறைந்த அளவு தேவைப்படுபவை போரான், குளோரின். 3. வகைப்படுத்தப்படாதவை - சிலிக்கான் , செலீனியம்.

**168. தீர்வு கட்ட செறிவு** - தனிமங்கள் தாவரங்களுக்கு தேவைப்படும் சரியான செறிவு ஆகும் . குறைந்தால் பற்றாக்குறையும் அதிகரித்தால் நச்சு விளைவும் ஏற்படும்.

**169. நைட்ரஜன் சுழற்சி** - இதில் 5 நிலைகள் உள்ளன. 1. நைட்ரஜன் நிலைநிறுத்தம் 2. நைட்ரைட்டாதல் 3.நைட்ரேட் தன்மயமாதல் 4. அம்ஆமானியாவாதல் 5. நைட்ரஜன் நீக்கம்.

## பாடம் - 13

**170. ஒளிச்சேர்க்கை நிறமிகள்** - ஒளிச்சேர்கை வினையில் ஈடுபடும் நிறமிகள் ஆகும். 1 முதன்மை நிறமி - பச்சையம் a 2. துணை நிறமிகள் - பச்சையம் b,c,d,e மற்றும் கரோட்டீன்கள்

**171. ஒளிச் சேர்க்கை வினைகள்** - 1. ஒளிவினை : சூரிய ஒளி ஆற்றல் ஒளிச்சேர்க்கை நிறமிகளால் கவரப்பட்டு வேதியாற்றலாக மாற்றப்படுவது. 2. இருள் வினை : ஒளிவனையில் உருவாக்கப்பட்ட வேதியாற்றல் உதவியால் கார்பன் டை ஆக்ஸைடு ஒடுக்கப்படுவது ஆகும்.

**173. ஒளிச் சுவாசம்** - தாவரங்களில் ஒளி உள்ள போது நடைபெறும் அதிகப்படியான சுவாசம் ஒளிச்சுவாசம் ஆகும். இது மைட்டோகாண்டிரியா, பசுங்கணிகம், பெராக்ஸிசோம் ஆகிய 3 நுண்ணுறுப்புகளில் நடைபெறுகிறது.

**174. ஒளி சுவாசத்தின் முக்கியத்துவங்கள்** - 1. ஒளி சுவாசத்தின் போது உருவாகும் சீரைன் புரத உற்பத்திக்கு பயன்படுகிறது. 2. இதல் உருவாகும் கிளைக்கோலேட் ஆக்ஸிஜனேற்ற சிதைவில் இருந்து பாதுகாக்கிறது.

## பாடம் - 14

**175. சுவாசித்தல் நிலைகள்** - 1 மிதவை சுவாசித்தல் - கார்போஹைட்ரேட்கள் மற்றும் லிப்பிடுகள் சுவாசித்தலில் ஈடுபடுகிறது. 2.புரோட்டோபிளாஸ்ம சுவாசித்தல் - புரதம் சுவாசித்தலில் ஈடுபடுகிறது.

**176. சுவாசித்தல் வகைகள்** - 1. காற்று சுவாசித்தல் - ஆக்ஸிஜன் மூலக்கூறு பயன்படுகிறது. 2.காற்றில்லா சுவாசித்தல் - ஆக்ஸிஜன் மூலக்கூறு பயன்படுவதில்லை.

**177. சுவாச ஈவு** - சுவாசித்தலின் போது வெளியிடப்படும் கார்பன் டை ஆக்ஸைடு மற்றும் பயன்படுத்தப்படும் ஆக்ஸிஜனுக்கும் இடையே உள்ள விகிதம்.

**BY - G. SENTHILKUMAR - P.G TEACHER (BOTANY) KNHSS-KAMUTHI - RAMNAD DT.**

**178 நொதித்தல்** - காற்றில்லா சுவாசம் நொதித்தல் என்படும். 3 வகைப்படும். 1. ஆல்கஹால் நொதித்தல் 2.லாக்டிக் அமில நொதித்தல் 3. கலப்பு அமில நொதித்தல்

**179. பென்டோஸ் பாஸ்பேட் வழித்தடத்தின் முக்கியத்துவம்.** - 1. புதிய பொருட்கள் உருவாகும் வளர்வினைகளில் உதவுகிறது. 2. ஆந்தோசயனின் , லிக்னின் போன்ற இரண்டாம் நிலைப் பொருட்கள் உருவாக்கத்தில பயன்படுகிறது.

## பாடம் - 15

**180. தாவர வளர்ச்சி ஒழுங்குபடுத்திகள்** - தாவரத்தின் பாகங்களில் மிகக் குறைவான அளவு உருவாகும் கரிமக் கூட்டுப்பொருட்கள் தாவர வளர்ச்சிக்கு பயன்படுவது தாவர வளர்ச்சி ஒழுங்குபடுத்திகள் அல்லது வேதி தூதுவர்கள் எனப்படும்.

**181. தாவர வளர்ச்சி ஒழுங்குபடுத்திகள் வகைகள்** - 1. தாவர வளர்ச்சி ஊக்கிகள் - ஆக்சின்கள், ஜிப்ரலிக் அமிலம், சைட்டோகைனின்கள் . 2. தாவர வளர்ச்சி அடக்கிகள் - எத்திலின் மற்றும் அப்சசிக் அமிலம்

**182. ஆக்சின் வகைகள்** - தாவரங்களின் நீள்போக்க வளர்ச்சிக்கு பயன்படும் ஆக்சின்கள் இருவகைப்டும். 1.இயற்க்கை ஆக்சின்கள் (இன்டோல் அசிட்டிக் அமிலம், பினைல் அசிட்டிக் அமிலம்) 2. செயற்க்கை ஆக்சின்கள் ( நாப்தலின் அசிட்டிக் அமிலம் )

**183. ஆக்சின் வாழ்வியல் விளைவுகள்** - 1. நுனி ஆதிக்கம் (பக்க மொட்டு வளர்ச்சியை தடைசெய்தல்). 2.இலை உதிர்தலை தடைசெய்கிறது. 3. விதையில்லா கனி உருவாக்குகிறது.

**184. ஜிப்ரலின் வாழ்வியல் விளைவுகள்** - 1. செல் நீட்சிக்கு உதவுகிறது. 2. கணுவிடைப்பகுதி நீட்சியடைய உதவுகிறது. 3. விதை முளைத்தலை தூண்டுகிறது.

**185. போல்டிங்** - மரபு ரீதியாக குட்டையான தாவரங்கள் ஜிப்பரலின்கள் பயன்படுத்துவதன் மூலம் உயரமாக வளர்வது மற்றும் மலர்களை உருவாக்குவது போல்டிங் எனப்படும்.

**186. சைட்டோகைனின் வாழ்வியல் விளைவுகள்** - 1. செல்பகுப்பை தூண்டுகிறது. 2. விதை உறக்கத்தை நீக்குகிறது. 3. உணவுப் பொருள் இடப்பெயர்ச்சிக்கு உதவுகிறது.

**187. ரிச்மாண்ட் லாங் விளைவு** - தாவரங்கள் முதுமையடைவதை சைட்டோகைனின் தாமதப்படுத்துவது.

**188. எத்திலின் வாழ்வியல் விளைவுகள்** - 1. கனிப்பழுத்தல் மற்றும் சுவாசித்தலைத் தூண்டுகிறது. 2.இலை உதிர்தலைத் தூண்டுகிறது. 3. தண்டு நீட்சியடைதலைத் தடுக்கிறது.

**189. அப்சசிக் அமிலம் வாழ்வியல் விளைவுகள்** - 1. இலைத்துளைகளை மூடுகிறது. 2. கனி மலர்கள் உதிர்தலைத் தூண்டுகிறது. 3. விதை உறக்கத்தை தூண்டுகிறது.

**190. ஒளிக்காலத்துவம்** - ஒளியானது மலர்கள் மலர்தலுக்கான செயலியலில் ஏற்படுத்தும் மாறுபாடு ஒளிக்காலத்துவம் ஆகும்.

**191. ஒளிக்காலத்துவத்தின் வகைப்பாடு** - 1. நெடும் பகல் தாவரங்கள் (பார்லி , ஓட்ஸ்) 2. குறும் பகல் தாவரங்கள் (புகையிலை , நெல் ) 3. பகலளவு சாராத தாவரங்கள் ( தக்காளி , பருத்தி )

**192. தட்ப பதனம்.** - ஒளியைப் போல வெப்பநிலை வேறுபாடு மலர்தல் செயலியியலில் உண்டாக்கும் மாறுபாடு தட்பபதனம் ஆகும். இது பொதுவாக 0°C முதல் 5°C வெப்பநிலை வரை இருக்கும்.



Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com